**தலைப்பு – 139 – கடற்றொழில் நீரகவள அபிவிருத்தி அமைச்சு மற்றும் அவ் அமைச்சின் கீழுள்ள திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2013 ஆம் ஆண்டு**

---

இவ் அறிக்கை இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

1 ஆவது பகுதி- அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

2 ஆவது பகுதி- ஒவ்வொரு தலைப்பிற்கும் உரிய விபரமான அறிக்கை

## I ஆவது பகுதி

**கடற்றொழில் நீரகவள அபிவிருத்தி அமைச்சு மற்றும் அவ் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் சம்பந்தமான சுருக்கமான அறிக்கை**

---

### 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்

| தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 290 | கடற்றொழில் நீர்வளங்கள் திணைக்களம் |

### 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்குகள்

#### (அ) மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவுகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய ஏற்பாடுகள் ரூபா 2,774,206,239 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் இதில் ரூபா 2,268,336,725 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சு மற்றும் திணைக்களத்தின் தேறிய ஏற்பாட்டில் முறையே ரூபா 206,999,474 தொகை மற்றும் ரூபா 298,870,040 தொகை அதாவது தேறிய ஏற்பாட்டில் முறையே 9.84 சதவீதம் மற்றும் 44.57 சதவீதம் ஆக இருந்தன. விபரம் பின்வருமாறு.

| தலைப்பு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடுகள் | பயன்பாடுகள் | சேமிப்புக்கள் | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 139 | 2,103,676,239 | 1,896,676,765 | 206,999,474 | 9.84 |
| 290 | 670,530,000 | 371,659,960 | 298,870,040 | 44.57 |
| மொத்தம் | 2,774,206,239 | 2,268,336,725 | 505,869,514 | **18.23** |

## (ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு

பல்வேறு செயற்பாடுகளுக்காக ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் ரூபா 70,410,597 கூட்டுத்தொகையான நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதியேற்பாட்டின் பயன்பாடு தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| நிதியேற்பாட்டைப் பெற்ற அமைச்சு/ திணைக்களம் | நிதியேற்பாட்டை வழங்கிய அமைச்சு/ திணைக்களம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|---|
| | | தேறிய ஏற்பாடுகள் | பயன்பாடுகள் | சேமிப்புக்கள் | |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| கடற்றொழில் நீர்வள அபிவிருத்தி அமைச்சு | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 14,334,500 | 11,573,150 | 2,761,350 | 19.26 |
| கடற்றொழில் நீர்வளங்கள் திணைக்களம் | மாவட்ட செயலாளர், களுத்துறை | 270,000 | 242,999 | 27,001 | 10.00 |
| கடற்றொழில் நீர்வளங்கள் | மாவட்ட செயலாளர், | 97,833 | 97,833 | | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திணைக்களம் | கொழும்பு | | | | |
| கடற்றொழில் | மாவட்ட | 527,667 | 527,667 | - | - |
| நீர்வளங்கள் | செயலாளர், | | | | |
| திணைக்களம் | கம்பஹா | | | | |
| கடற்றொழில் | கரையோரப் | 7,703,685 | 7,703,685 | - | - |
| நீர்வளங்கள் | பாதுகாப்புத் | | | | |
| திணைக்களம் | திணைக்களம் | | | | |
| கடற்றொழில் | கடற்றொழில் | 47,476,912 | 47,367,254 | 109,658 | 0.23 |
| நீர்வளங்கள் | நீர்வள | | | | |
| திணைக்களம் | அபிவிருத்தி | | | | |
| | அமைச்சு | | | | |
| | | ------------- | --------------- | -------------- | |
| மொத்தம் | | 70,410,597 | 67,512,588 | 2,898,009 | 4.11 |
| | | ====== | ======= | ====== | |

## 2.2 வருமானக் கணக்கு

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

கடற்றொழில் நீர்வளங்கள் திணைக்களத்தினால் 2013 ஆம் ஆண்டின் போது 01 வருமானக் குறியீட்டிற்காக ரூபா 10.00 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது வருமானமாக ரூபா 10.84 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. மதிப்பிடப்பட்ட வருமானத்தை விஞ்சி ரூபா 838,496 தொகை அதாவது 8.38 சதவீதம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறு.

| வருமானக் குறியீடு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | மதிப்பீட்டின் சதவீதமாக மிகைகள் |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகைகள் | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 10.03.07.06 | 10,000,000 | 10,838,496 | 838,496 | 8.38 |

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானவை | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 13901 | 6,300,000 | 4,161,677 | 3,800,000 | 4,918,169 | 38,000,000 | 23,730,366 |
| 29001 | 20,000,000 | 15,475,399 | 12,000,000 | 17,916,239 | 112,000,000 | 67,780,614 |

## 2.4 கட்டுநிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

### 2.4.1 கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கட்டுநிதி மீதிகள் ரூபா 47,641,347 ஆக இருந்தது. விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| அமைச்சு/ திணைக்களம் | கட்டுநிதிக் கணக்கு இலக்கம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| கடற்றொழில் நீரகவள அபிவிருத்தி அமைச்சு | 7002/0000/000/0089/0013/000 | 47,637,759 |
| கடற்றொழில் நீர்வளங்கள் திணைக்களம் | 7002/0000/000/0257/0013/000 | 3,588 |
| மொத்தம் | | 47,641,347 |

**2.4.2 பொது வைப்புக் கணக்குகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகள் ரூபா 43,582,353 கூட்டுமொத்தமாக இருந்தது. விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| அமைச்சு/ திணைக்களம் | வைப்புக் கணக்கு இலக்கம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| கடற்றொழில் நீரகவள அபிவிருத்தி அமைச்சு | 6000/0000/000/0015/0051/000 | 39,179,041 |
| கடற்றொழில் நீர்வளங்கள் திணைக்களம் | 6000/0000/000/0015/0145/000 | 4,403,312 |
| மொத்தம் | | 43,582,353 |

## 2 ஆவது பகுதி

---

**ஒவ்வொரு தலைப்பிற்கும் உரிய விபரமான அறிக்கை**

---

**1. தலைப்பு 139 – கடற்றொழில் நீரகவள அபிவிருத்தி அமைச்சு**

---

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

கடற்றொழில் நீர்வள அபிவிருத்தி அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 13 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக

சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் கடற்றொழில், நீர்வள அபிவிருத்தி அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும், இணக்கக் கூற்றும் இங்கே (அ) தொடக்கம் (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.4 தொடக்கம் 1.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செலவின விடயமொன்றிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 110,000,000 மொத்தத் தேறிய நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 10 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 26 சதவீதம் முதல் 96 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(iii) கப்பலொன்றைக் கொள்வனவு செய்வதற்கு மீளாய்வாண்டிற்காக ரூபா 110 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிதியேற்பாட்டைப் பயன்படுத்தி தேசிய நீர்வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனத்திற்கு ஆராய்ச்சிக் கப்பலொன்றுக்காக ரூபா 30 மில்லியன் தொகையும், திக்ஓவிட்ட மீன்பிடித் துறைமுக செயற்திட்டத்திற்காக ரூபா 80 மில்லியன் தொகையும் ஆக மொத்த நிதியேற்பாடு ஏனைய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தன.

2006 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடத்திலும் கப்பல்களைக் கொள்வனவு செய்வதற்காக அமைச்சின் மூலம் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டு அந்த நிதியேற்பாடு ஏனைய செயற்பாடுகளுக்காக மாற்றுதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதுடன் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கப்பலைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) வெளிநாட்டு பிரயாண செலவின விடயத்திற்காக ரூபா 4,500,000 தொகையான மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டிற்கு மேலதிகமாக நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் ரூபா 4,697,715 தொகையும், குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 1,500,000 தொகையும் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. இவ்வாறு மேலதிகமாகப் பெறப்பட்ட நிதியேற்பாடு மொத்த நிதி ஏற்பாட்டில் 138 சதவீதமாக இருந்தது.

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு**

---

திவிநெகும செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சிலிருந்து ரூபா 14,334,500 கூட்டுத்தொகையான நிதியேற்பாடு அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதியேற்பாட்டில் ரூபா 11,573,150 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திவிநெகும கடற்றொழில் பிரிவில் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சிலிருந்து 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 23,832,000 தொகை கிடைத்திருந்தது. குறைவான செயலாற்றலின் காரணமாக அந்த நிதியேற்பாடு பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் மீளப்பெறப்பட்டிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டின் போது கிடைத்த ரூபா 7,669,565 நிதியேற்பாட்டிலிருந்து 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களுக்காக செலவிடப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டிற்குரிய செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட முற்பணங்களிலிருந்து ரூபா 5,940,164 தொகை கடற்றொழில், நீர்வள அபிவிருத்தி அமைச்சின் தலைப்பு 139 இன் மூலமும், ரூபா 1,729,401 தொகை திவிநெகும

2013 இன் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலமும் தீர்க்கப்பட்டிருந்தது. அமைச்சினால் செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது முறையான மதிப்பீடு தயாரித்தல் அல்லது செலவின முகாமைத்துவமொன்று காணப்படாமையினால் 2013 இன் திவிநெகும செயற்திட்டத்தின் உத்தேச இலக்கை அடைய முடியாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ii) திவிநெகும 2013 இன் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட நலனாளிகளுக்கு நிதியுதவி தவணையாக செலுத்துவதற்கு நீரியல் வளங்கள் உற்பத்தி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 45,000,000 தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 6,645,950 தொகை கடற்றொழில், நீர்வள அபிவிருத்தி அமைச்சின் செலவின விடயத்தில் அமுல்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களின் செலவினங்களைத் தீர்ப்பதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(iii) நீரியல் வளங்கள் உற்பத்தி அபிவிருத்தி அதிகாரசபையினால் திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்திற்காக பெறப்பட்ட முற்பணத்தைத் தீர்ப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 1,809,000 தொகையான 3 உறுதிச்சீட்டுக்களைப் பயன்படுத்தி அமைச்சினால் முற்பணம் இரு தடவை தீர்க்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ரூபா 1,062,000 தொகையான முற்பணம் பிழையாக மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**(இ) கட்டுநிதிக் கணக்கு**

---------------------------------

அமைச்சின் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 7002/000/00/0008/0013/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் ரூபா 47,637,759 மீதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை. அமைச்சினால் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கு மீன்களை கொள்வனவு செய்வதற்காகவும் ஏனைய நாளாந்த செலவினங்களுக்காகவும் திருப்பிச் செலுத்தும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் 2010 நவம்பர் 05 ஆந் திகதி வழங்கப்பட்ட ரூபா 10,000,000 தொகையான முற்பணத்திற்காக 03 வருட காலம் கடந்திருந்த போதிலும் அந்த முற்பணம் 2013 திசெம்பர்

31 ஆம் திகதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்காக முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

-----------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 13901 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்றின் படி அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,468,522 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

(ii) 1987 முதல் 1994 வரையிலான காலத்திலிருந்து காணப்படுகின்ற இடமாற்றலவாகிச் சென்ற 14 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 153,526 தொகையான கடன் மீதி தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6 ஆம் பிரிவு மற்றும் 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுத்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களிடயே பல்வேறு காரணங்களின் அடிப்படையில் தீர்க்கப்படாது காணப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களின் ரூபா 45,910 கூட்டுத்தொகையான கடன் மீதியை பிணையாளர்களிடமிருந்து அறவிடும் நடவடிக்கை எடுக்குமாறு 2006 திசெம்பர் 28 ஆந் திகதிய 1/7/19/விஷேட குழு ஆம் இலக்க முற்பணத்தை தீர்க்கும் குழு தலைவரின் கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.8 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்காது அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நிறுவனங்கள் மற்றும் செயற்திட்டங்களுக்கு விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 329,987 கூட்டுத்தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(v) தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.1 மற்றும் 4.2 ஆம் பிரிவின் படி நடவடிக்கை எடுக்காமையினால் 1985 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் ஓய்வு பெற்றுச் சென்ற 35 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 127,580 கூட்டுத்தொகையான கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(vi) 1986 ஆம் ஆண்டு முதல் 1995 ஆம் ஆண்டு வரையான காலத்தில் மரணமடைந்த 10 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 62,569 தொகையான கடன் மீதி தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.4 ஆம் பிரிவின் படி அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) 1994 ஒக்தோபர் 01 ஆந் திகதி முதல் வேலை நீக்கம் செய்யப்பட்ட சாரதியொருவரிடமிருந்து அறவிடவேண்டிய கடன் தவணைப் பணம் 2013 ஒக்தோபர் மாதத்தின் பின்னர் அறவிடப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அந் நிலுவைக் கடன் மீதி ரூபா 14,000 ஆக இருந்தது.

(viii) 1985 ஆம் ஆண்டு முதல் 2009 ஏப்ரல் 01 ஆந் திகதி வரையிலான காலத்தில் சேவையை விட்டுச் சென்ற 24 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 665,471 தொகையான கடன் மீதி பலவருட காலமாக நிலுவையாக முன்கொண்டு வரப்பட்டிருந்தது. தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.4.1 மற்றும் 4.5 ஆம் பிரிவுகளின் படி

உரிய பிணையாளர்களிடமிருந்து அந்தக் கடன் மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ix) 1994 மற்றும் 1995 ஆம் ஆண்டுகளில் முன்னாள் அமைச்சரின் உத்தியோகபூர்வ காலம் முடிவடைவதுடன் அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் சேவை முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட 04 பிரத்தியோக பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 78,754 தொகையான கடன் மீதி தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.1 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிற்காக முகாமைத்துவத்திற்கு வழங்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட 46 பற்றாக்குறைகள் மற்றும் 5 மிகைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 752(2) இன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் பொருள் மெய்மையாய்வு அறிக்கை பூரணப்படுத்தப்படாதிருந்ததுடன் அதன் உள்ளபடியான மீதி காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) பிரதி அமைச்சரின் அலுவலகத்தின் பொருள் மெய்மையாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்

---------------------------------------------------------------------------------

அமைச்சினால் மோட்டார் வண்டியொன்று நீரியல்வாழ் உற்பத்தி அபிவிருத்தி அதிகாரசபைக்கும் மேலுமொரு மோட்டார் வண்டி கடற்றொழில் நீர்வளங்கள் திணைக்களத்திற்கு முறையற்ற வகையில் விடுவிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்

--------------------------------------------------------------------------------------------------------------------

ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சில சொத்துக்கள் முறையான அங்கீகாரமின்றி பாவனைக்கு எடுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வாகன வகை | சொத்துக்குரிய நிறுவனம் | எண்ணிக்கை |
|---|---|---|
| மோட்டார் வாகனங்கள் | இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் | 01 |
| | கடற்றொழில் நீர்வளங்கள் திணைக்களம் | 01 |
| | உணவு மற்றும் கமநல அமைப்பு | 02 |

**(ஈ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

அமைச்சு மற்றும் அதனோடிணைந்த நிறுவனங்களில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 279,420,369 ஆக இருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப்பிரமாணம் 214 இல் குறிப்பிடப்பட்ட தேவைகளை நிறைவேற்றும் வகையில் பொறுப்புப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிப்பிரமாணம் 94(1) இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்காமையினால் 10 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் எஞ்சிய நிதியேற்பாட்டை விஞ்சி ரூபா 219,430,504 கூட்டுத்தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 செயற்திட்டத்தை அமுல்படுத்துவதில் நலிவுகள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 1.6.1 பூர்த்தி செய்யப்பட்ட வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களின் நோக்கங்களை அடைதல் மற்றும் அவற்றின் சொத்துக்களை கையளித்தல் தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்காமை

பூர்த்தி செய்யப்பட்ட பின்வரும் வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைதல் மற்றும் செயற்திட்டங்களுக்காகக் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களை கையளித்தல் தொடர்பான அறிக்கை 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| செயற்திட்டம் | செயற்திட்டம் பூர்த்திசெய்யப்பட்ட திகதி |
| --- | --- |
| சுனாமியால் அழிவிற்குட்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்பும் செயற்திட்டம் | 2010.12.31 |
| கரையோர வள முகாமைத்துவ செயற்திட்டம் | 2009.06.30 |
| சுனாமிக்குப் பின் வாழ்வாதார உதவி ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டம் | 2011.09.30 |
| இலங்கை தீவின் வெளி எல்லையை நிர்ணயிக்கும் செயற்திட்டம் | 2012.12.31 |

## 1.6.2 திக்ஓவிட்ட மீன்பிடித் துறைமுக செயற்திட்டம்

திக்ஓவிட்ட மீன்பிடித் துறைமுக செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

### (அ) செயற்திட்ட நோக்கங்களுக்கு முரணான செலவினம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்ட நோக்கங்களுக்கு முரணாக ரூபா 1,737,000 தொகை கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு வத்தளை பிரதேச சபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) நோக்கங்களுக்கு முரணாக செயற்திட்ட நிதியத்திலிருந்து ரூபா 33 மில்லியன் அரசாங்க கம்பனி என்ற அடிப்படையில் நிதிக் கஷ்டத்தைத் தீர்க்கும் வகையில் முற்பணமாக 2012 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த முற்பணங்களிலிருந்து ரூபா 29,641,352 தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## (ஆ) செயற்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 1.2.1 ஆம் வழிகாட்டியின் படி கொள்வனவு நடவடிக்கைகள் ஆகக்கூடிய பொருளாதார நலன்களையுடையதாகவும் ஆகக் குறைந்த கிரயத்தின் கீழும் மேற்காள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், செயற்திட்டத்திற்காக உபகரணத் தொகுதிகளைக் கொள்வனவு செய்யும் போது அரசாங்கக் கம்பனியொன்றின் பங்குபற்றலுடன் ரூபா 32,449,064 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அந்தப் பெறுமதியில் ரூபா 1,655,504 தொகையான மிகையொன்று அந்த அரச கம்பனிக்கு பெற்றுக்கொடுக்கும் வகையில் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி அரசாங்க கொள்வனவு வழிகாட்டிகளுக்கு முரணாகவும் முறையான அதிகார பலமின்றியும் ரூபா 1,655,504 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) மீன்பிடித் துறைமுகத்தை நிர்மாணிப்பதற்காகக் கிடைத்த நிதியேற்பாடுகளிலிருந்து மீன்பிடித் துறைமுகத்தின் நடவடிக்கைகளை பேணிச் செல்வதற்காக தேவையான அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 5 மில்லியன் ஒதுக்கப்பட்டு இலங்கை கடற்றொழில் துறைமுகக் கூட்டுத்தாபனத்தின் தேவையின் அடிப்படையில் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்தக் கொள்வனவுகளின் போது பொருளாதார நலன்களையுடையதாக நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை பின்வரும் விடயங்களின் படி அவதானிக்கப்பட்டன.

* காசுக் காப்பகமொன்று காணப்படும் போது இன்னுமொரு காப்பகமொன்று ரூபா 68,628 தொகையில் கொள்வனவு செய்யப்பட்டமை.

* 15 கணனிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கும் போது மீண்டும் 3 கணனிகள் ரூபா 230,670 தொகையில் கொள்வனவு செய்யப்பட்டமை.

* ரூபா 188,809 பெறுமதியான 10 IP Phone கொள்வனவு செய்யப்பட்டமை.

* 02 நிழற்படப் பிரதி இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கும் போது இன்னுமொரு நிழற்பட பிரதி இயந்திரமொன்று ரூபா 94,080 இற்கு கொள்வனவு செய்யப்பட்டமை.

* 04 பெக்ஸ் இயந்திரங்கள் ரூபா 66,080 இற்கு கொள்வனவு செய்யப்பட்டமை.

* 23 கோவை அலுமாரிகள் ரூபா 340,388 இற்கு கொள்வனவு செய்யப்பட்டமை.

* 07 கணனி அச்சிடல் இயந்திரங்கள் ரூபா 330,780 இற்கு கொள்வனவு செய்யப்பட்டமை.

(iii) செயற்திட்டம் முடிவடைவதற்கு 06 மாதங்கள் அளவிலான காலம் காணப்படும் போது ரூபா 829,574 தொகை செலவில் தளபாடப் பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அந்தப் பொருட்கள் மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கு இருந்த காலத்தை கவனத்தில் கொள்ளும் போது பயனுள்ளதாக செயற்திட்ட நோக்கங்களுக்கு பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் என திருப்தியடைய முடியாதிருந்தது.

**(இ) ஐஸ் தொழிற்சாலை**

**------------------------------**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீன்பிடித் துறைமுக செயற்திட்டத்தின் 3 ஆவது கட்டத்தின் கீழ் ரூபா 97,149,878 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஐஸ் தொழிற்சாலை கட்டிடத்தின் ஒரு இயந்திரக்கூடம் 2014 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது.

(ii) மீன்பிடித் துறைமுகத்தில் ஐஸ் தயாரிப்புப் பிரிவில் பொருத்தப்பட்ட ரூபா 1,752,920 பெறுமதியான Hoist & Over Head Crane இயந்திரம் செயற்பாடற்றிருந்தமையால் ஐஸ் தொழிற்சாலையை வாடகைக்குப் பெற்ற நிறுவனத்தின் மூலம் புதிய இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தி செயற்பாட்டு நடவடிக்கைகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் இதற்காக ரூபா 580,483 தொகை செயற்திட்டத்தின் மூலம் செலுத்தப்பட்டிருந்தது. இதன் போது இயந்திரத்தின் உரித்து தொடர்பாக இணக்கப்பாடு எய்தப்படாமையினால் மீன்பிடித் துறைமுகத்திற்கு குத்தகையாளருக்கும் உரிய இயந்திரத்தின் உரித்துக்கு உரிமையொன்று காணப்படுவதனால் எதிர்காலத்தில் பிரச்சினைகளுடன்கூடிய நிலைமையொன்று ஏற்படக்கூடிய இடரொன்று காணப்பட்டது.

(iii) ஒப்பந்தக்காரரின் பொறுப்புக் காலத்தை மேவுகை செய்யும் ஐஸ் தயாரிக்கும் பிரிவின் அறைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய பழுதுபார்த்தல்கள் ஐஸ் தொழிற்சாலையை வாடகைக்குப் பெற்ற நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதற்காக ரூபா 1,557,628 தொகை ஐஸ் உற்பத்திக் கூடத்தை வாடகைக்கு எடுத்த நிறுவனத்திற்கு செயற்திட்டத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(iv) ரூபா 598,000 கூட்டுப்பெறுமதியான 02 "Ice Crusher" இயந்திரங்கள் 02 வருட காலம் முழுவதும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

**(ஈ) தீர்க்கப்படாத முற்பணம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) படகு இறங்குதுறையை நிர்மாணிப்பதற்காக வ/ப சீனோர் மன்றத்திற்கு வழங்கப்பட்ட முற்பணங்களிலிருந்து ரூபா 868,460 தொகை குறைத்து 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு முற்பணக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 2,978,060 தொகையான முற்பணம் தீர்க்கப்பட்டிருந்த போதிலும் தீர்க்கும் உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படாது நாட்குறிப்புப் பதிவுகள் மூலம் தீர்க்கப்பட்டிருந்தது.

**(உ) பதவியணியினர் கொடுப்பனவுகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2007 ஏப்ரல் 05 ஆந் திகதியில் 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 4.2.2 ஆம் பந்தியின் படி செயற்திட்டப் பதவியணியினர், உரிய சம்பளப் படிநிலைகளில் ஆரம்பப் படி நிலையில் வைக்கப்பட வேண்டியிருந்ததுடன் அந்த சுற்றறிக்கையின் 9:1 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் செயற்திட்டப் பதவியணியினர் சம்பள ஏற்றம் செலுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான செயலாற்றல் மதிப்பீடு மேற்கொள்ளப்படாது 2011 யூன் மாதம் முதல் 2013 திசெம்பர் மாதம் வரை சம்பள ஏற்றமாக ரூபா 287,166 தொகை பதவியணியினருக்குச் செலுத்தப்பட்டிருந்தன.

(ii) இடைக்கால அடிப்படையில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற செயற்திட்டப் பணிப்பாளரின் வாழ்க்கைச் செலவுப் படி நிரந்தர சேவை நிலையத்திலிருந்து பெறப்பட வேண்டியிருந்த போதிலும் 2011 யூன் மாதம் முதல் 2013 திசெம்பர் மாதம் வரை ரூபா 252,500 தொகை செயற்திட்டத்தின் மூலம் செலுத்தப்பட்டிருந்தது.

**(ஊ) வாகன விபத்து**

---------------------------

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) விபத்திற்குள்ளாகிய கெப் வண்டியொன்று ரூபா 939,173 தொகை செலுத்தி வாகனத்தின் முகவர் நிறுவனத்திலிருந்து பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த நட்டத்தை மேவுகை செய்வதற்காக காப்புறுதிக் கம்பனியிடமிருந்து கோரப்பட்டிருந்த போதிலும், காப்புறுதிக் கம்பனியின் மூலம் அந்த நட்டக் கொடுப்பனவு நிராகரிக்கப்பட்டிருந்தது. இந்த விபத்துத் தொடர்பாக அமைய அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட சாரதியொருவர் பொறுப்புடையவராக இருந்த போதிலும் அவர் சேவையிலிருந்து விலகியிருந்தார். எவ்வாறாயினும் நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நட்டத்திற்குப் பொறுப்பான தரப்பினரிடமிருந்து நட்டத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கெப் வண்டி விபத்திற்கு உட்பட்டமையினால் அதன் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் பூர்த்தியடையும் வரையிலும் 2013 யூலை 26 ஆந் திகதி முதல் ஒக்தோபர் மாதம் வரை மாதமொன்றிற்கு ரூபா 63,000 வீதம் வாடகை செலுத்தும் அடிப்படையில் பெற்றோல் மோட்டார் வாகனமொன்று பெறப்பட்டிருந்த போதிலும் அதற்காக அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.4 வழிகாட்டியின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(எ) துறைமுக திறத்துவைத்தல் விழாவிற்குரிய கொடுப்பனவுகள்**

---------------------------------------------------------------------------------------------------

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திக்ஓவிட்ட மீன்பிடித் துறைமுகத்தை திறத்துவைக்கும் விழாவின் நடவடிக்கைகளை நிறைவேற்றிய தனியார் நிறுவனத்திற்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

* இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் கொள்வனவுக் குழுவினால் கூறுவிலை கோரப்படாமல் விழாவின் ஏற்பாட்டு நிகழ்ச்சிகளுக்காக நிறுவனத்திற்கு ஒப்பந்தத்தைக் கையளிப்பதற்காக மேவுகை அங்கீகாரமொன்று வழங்கப்பட்டிருந்தது. அந்த அங்கீகாரத்தை அடிப்படையாகக் கொண்டு அது தொடர்பாக எவ்வித விசாரணைகளும் மேற்கொள்ளப்படாது அங்கீகரிக்கப்பட்ட மற்றும் இணங்கப்பட்ட தொகையை விஞ்சி ரூபா 1,898,950 தொகை அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்தது.

* விழாவிற்காக அதிவிஷேட மற்றும் விஷேட விருந்தினர்களுக்காக 545 கதிரைகள் மற்றும் 4,750 சாதாரண விழாமண்டப கதிரைகள் வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டு உரிய நிறுவனத்திற்கு பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், மேடைத் திட்டத்தின் படி வைக்கப்படக்கூடிய கதிரைகளின் எண்ணிக்கை முறையே 260 மற்றும் 1,800 கதிரைகளாக இருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. அதன்படி கதிரைகளுக்காக ரூபா 300,250 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

* விழாவிற்காக இரண்டு பத்திரிகைகளில் அறிவித்தல்களைப் பிரசுரிப்பதற்காக முறையே ரூபா 19,800 மற்றும் ரூபா 140,800 தொகைகளாக ரூபா 160,600 கூட்டுத்தொகை அந்த பத்திரிகை நிறுவனங்களுக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) நினைவுக் கல்லிற்கு ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனத்திற்கு பணி கையளிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக கொள்வனவுக் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் போது மேலதிகக் கட்டணமாக ரூபா 350,000 அந்த நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியமை குறிப்பிடப்பட்டு குழுவினால் கூறுவிலை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அந்த மலதிக கொடுப்பனவு தொடர்பான விபரம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(iii) மீன்பிடித் துறைமுகத்தின் தகவல்களை உள்ளடக்கிய 7,500 புத்தகங்களுக்காக ரூபா 470,000 தொகையும், 100,000 வீதிப் போஸ்டர்கள் அச்சிடுவதற்காக ரூபா 1,500,000 தொகையும், 4 தோரணங்கள் நிர்மாணிப்பதற்காக ரூபா 1,116,000 தொகையும் நினைவுச் சின்னங்களுக்காக ரூபா 1,000,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்ததுடன் உரிய பணிகள் நிறைவேற்றப்பட்டமைக்கான எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஏ) திக்ஓவிட்ட துறைமுகத்தின் நுழைவாயில் மற்றும் பாலம் நிர்மாணம்**

செயற்திட்டத்தின் கீழ் துறைமுக நுழைவாயில் மற்றும் பாலத்தை நிர்மாணிப்பதற்காக நெதர்லாந்து அரசாங்கத்தின் உதவியாக (ORET) யூரோ 800,000 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் நுழைவாயிலுக்காக பாலம் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அது பிரதான வீதிக்கு தொடர்புபடுத்தப்படாமையின் காரணமாக பாலத்தை பயன்பாட்டிற்கு எடுக்கமுடியாதிருந்தது.

**(ஐ) கணக்கீடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சினால் திக்ஓவிட்ட துறைமுக நிர்மாண செயற்திட்டத்திற்காக ரூபா 19,643,222 தொகையான நேர்ச்செலவினம் செயற்திட்டத்தின் 2013 இற்குரிய நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) செயற்திட்டத்தினால் நிர்மாண ஒப்பந்தம் நிறுவனத்திற்கும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கும் செலுத்த வேண்டியதாக இருந்த முறையே ரூபா 74,855,517 மற்றும் ரூபா 30,000,000 வரித்தொகை மிகை ஏற்பாடு செய்யப்பட்டதாக பதிவழிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய அங்கீகாரம் மற்றும் காரணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) செயற்திட்டத்தில் ரூபா 37,181,079 தொகையான பெறவேண்டிய மீதி மற்றும் ரூபா 83,223,550 தொகையான செலுத்தவேண்டிய மீதிகளுக்கான மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஓ) கணக்காய்விற்கு சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை**

--------------------------------------------------------------------------------

திக்ஓவிட்ட துறைமுக செயற்திட்டத்தினால் வ/ப சீனோர் மன்றத்திற்கு மீளளிப்புச் செய்யப்பட்ட ரூபா 143,260 தொகையான செலவினங்களுக்குரிய எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.7 செயலாற்றல்

--------------------

2013 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி அமைச்சின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) திட்டமிடல்**

----------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சர் அலுவலகத்திற்காக ரூபா 6.75 மில்லியன் தொகையும், அமைச்சின் நிர்வாகத்திற்காக ரூபா 51.7 மில்லியன் தொகையும் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த பிரிவுகளுக்காக செயல்நடவடிக்கைத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 2013 ஆம் ஆண்டிற்கான மனித வளங்களைப் பெற்றுக்கொள்ளல், ஈடுபடுத்துதல் மற்றும் அபிவிருத்திக்கான திட்டம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2013 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஒவ்வொரு செயற்பாடுகளுக்கான பௌதீக செயலாற்றல் அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## (ஆ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

அமைச்சினால் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்த பிரதான செயற்பாடுகள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி மீன்பிடி சமூகத்தின் உயர்விற்காக திட்டமிடப்பட்ட இலக்குகளை முழுமையாக அடைய முடியாதிருந்தமையால் மீன்பிடி சமூகத்தை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 345 மில்லியன் நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 180.18 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ii) வட மாகாண மீன்பிடி சமூகத்தை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தில் 49 சதவீதம் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த நிகழ்ச்சித்திட்டத்தின் குறிப்பிடப்பட்ட இலக்கை அடைதல் நலிவான நிலையில் காணப்பட்டது.

(iii) இரணமடு மீன் இனவிருத்தி நிலையத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் 20 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி மீன் இனவிருத்தி நிலையத்தை நிர்மாணிப்பதால் எதிர்பார்த்த மீன் உற்பத்தியை உயர்வடையச் செய்வதன் மூலம் கிராமிய பொருளாதாரம் மற்றும் போசணை மட்டத்தை உயர்வடையச் செய்தல், வடக்கு பிரதேசத்தில் நீர்த் தேக்கங்களுக்கு தேவையான மீன்குஞ்சுகளை வழங்கும் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு மீளாய்வாண்டின் போதும் முடியாதிருந்தது.

(iv) நன்னீர் மீன் உற்பத்தியை உயர்வடையச் செய்வதற்கு நன்னீர் நீர்த்தேக்கங்களில் இலவசமாக மீன் குஞ்சுகளை விடும் செயற்திட்டத்தின் செயலாற்றல் 30 சதவீதம் மாத்திரமாக இருந்தது. அதன்படி உவர்நீர் மீன்களை பயன்படுத்துவதற்கு வசதியற்ற கிராமிய மக்களுக்கும் தோட்டங்களைச் சார்ந்த

மக்களுக்கும் விலங்குப் புரதத்தைப் பெற்றுக்கொள்ளும் மாற்றுவழி மூலமாகவும், கிராமிய சமூகத்தின் வாழ்வாதாரங்களை வழங்கும் மார்க்கமாகவும், ஏற்றுமதிச் சந்தை உள்ள உற்பத்தி மூலம் நாட்டின் ஏற்றுமதி வருமானத்திற்கான பங்களிப்பினை அதிகரித்தல் போன்ற இலக்குகளை அடைவது கஷ்டமாக இருந்தது.

**(இ) செயலாற்றல் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

---

கொள்வனவுத் திட்டத்தின் படி ரூபா 265.5 மில்லியன் தொகையான மீன்பிடி உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக உள்ளபடியான செயலாற்றல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

---

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாக இருந்தன. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2010 ஒக்தோபர் 11 ஆந் திகதிய நி.தி.அ.01/2010/01 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கையின் 2(1) ஆம் பந்தி மற்றும் 2012 யூன் 11 ஆந் திகதிய 1/1/16 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி மற்றும் 04 ஆம் பந்திகளுக்கு முரணாக கடற்றொழில், நீரகவள அபிவிருத்தி அமைச்சரின் இணைப்புச் செயலாளரொருவர் 2012 நவம்பர் 01 ஆந் திகதி முதல் 04 ஆந் திகதி வரை தனிப்பட்ட வகையில் சீன சுற்றுலாவில் ஈடுபட்டிருந்தார். அதன் பின்னர் 2012 நவம்பர் 05 ஆந் திகதி முதல் 08 ஆந் திகதி வரை 04 நாட்கள் கடமையில் ஈடுபட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரமின்றி நிறைவேற்றப்பட்ட அந்த கடமைகளுக்காக 04 நாட்களுக்கு இணைந்த படிகள் மற்றும் அமையக் கொடுப்பனவாக ரூபா 241,351 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த உத்தியோகத்தர் உரிய கடமையில் ஈடுபட்டிருந்தமையை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைவரின் ஐரோப்பிய சுற்றுலாவிற்கு விமானச்சீட்டு அனுமதிப்பத்திரக் கட்டணமாக ரூபா 152,000 தொகை அமைச்சின் நிதியேற்பாட்டிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

## 1.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

----------------------------------------------------------------

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) கொள்வனவு வழிகாட்டி நடைமுறைகளுக்குப் புறம்பானவை

------------------------------------------------------------------------------------------------------

அமைச்சின் சுற்றாடலை நவீனமயப்படுத்துவதன் கீழ் மீளாய்வாண்டின் போது பின்வரும் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

| **செயற்பாடுகள்** | **கிரயம்** |
|---|---|
| | **ரூபா** |
| அமைச்சின் கட்டிடத்திற்கு நுழையும் பிரதான நுழைவாயில் நிர்மாணம் | 506,198 |
| 03-VIP கராஜ் நிர்மாணம் | 448,668 |
| சிற்றுண்டிச்சாலைக்கு முன்பக்கம் கொங்கிரீட் கல் பதித்தல் | 495,460 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேற்கூறப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுதவற்காக மதிப்பீடு மற்றும் திட்டங்கள் தயாரிக்கப்படாதிருந்ததுடன் ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட நிறுவனத்தின் கூறுவிலையினை மதிப்பீடாகக் கருதி சிறு கொள்வனவுக் குழு செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு அங்கீகரித்திருந்தது.

(ii) இந்த அங்கீகரித்தலின் போது கொள்வனவுக் குழு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையினைப் பெற்றிருக்கவில்லை.

(iii) அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.3 மற்றும் 3.4 வழிகாட்டிகளுக்கு முரணாக மேற்கூறப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருந்தது.

(iv) அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.8 ஆம் வழிகாட்டிக்கு முரணாக மேற்கூறப்பட்ட செயற்பாடுகள் அவசர கொள்வனவு நடவடிக்கையைக் கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(v) அமைச்சின் கட்டிடத்திற்கு நுழையும் பிரதான நுழைவாயிலை நிர்மாணிக்கும் போது சுழற்றி அகற்றப்பட்ட பழைய 02 இரும்புக் கதவுகள் விற்பனை செய்யும் போது நிதிப்பிரமாணம் 770 மற்றும் 772 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருகக்கவில்லை.

**1.10 நட்டம் மற்றும் இழப்புக்கள்**

-----------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டம் மற்றும் இழப்புக்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) இழப்பு தொடர்பான பதிவேடு**

-----------------------------------------------

நிதிப் பிரமாணம் 110 இன் படி அமைச்சினால் தயாரிக்கப்பட வேண்டிய இழப்பு தொடர்பான பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

**(ஆ) வாகன விபத்துக்களினால் ஏற்பட்ட நட்டம்**

-----------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 ஆம் ஆண்டின் போது அமைச்சின் 12 வாகனங்கள் விபத்திற்குள்ளாகியிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கில் டீ.ஜீ.எஸ்.ஏ. 7 படிவத்தில் நட்டம் மற்றும் கைவிடல்

கூற்றில் அல்லது டீ.ஜீ.எஸ்.ஏ.7(1) புத்தகங்களிலிருந்து பதிவழித்தல் தொடர்பான கூற்றில் அந்த விபத்துக்கள் தொடர்பான விபரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்கூறப்பட்ட 12 விபத்துக்களில் 03 வாகனங்களுக்குரிய ரூபா 135,280 கூட்டுத்தொகையானது காப்புறுதி மூலம் மேவுகை செய்வதற்கு முடியாத நட்ட இழப்பை பொறுப்பு வாய்ந்த நபர்களிடமிருந்து அறவிடுவதற்குப் பதிலாக புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(iii) வாகன விபத்து மற்றும் ஏனைய நடவடிக்கைகளின் போது அமைச்சிற்கு ஏற்பட்ட நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 102 முதல் 113 வரையான பிரமாணங்களில் காணப்படுகின்ற நடவடிக்கைகளை எடுத்தல் மிகவும் நலிவான மட்டத்தில் காணப்பட்டது.

## 1.11 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 21 | 18 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 01 | 04 |
| (iii) | இரண்டாம் நிலை | 124 | 77 | 47 |
| (iv) | ஆரம்ப நிலை | 54 | 53 | 01 |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 07 | 07 | - |
| | மொத்தம் | 211 | 156 | 55 |

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 55 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) ஏனைய திணைக்களத்திற்கு முறையற்றதாக ஊழியர் ஒருவரை விடுவித்தல்**

---

அமைச்சினால் 2010 யூலை 07 ஆந் திகதி முதல் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்திற்காக அலுவலக உதவியாளரொருவர் முறையற்ற வகையில் கடற்றொழில் நீர்வளங்கள் திணைக்களத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தார்.

## 2. தலைப்பு 290 – கடற்றொழில் நீர்வளங்கள் திணைக்களம்

---

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

---

கடற்றொழில் நீர்வளங்கள் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 11 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

## 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கூற்று மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் கடற்றொழில் நீர்வளங்கள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும், இணக்கக் கூற்றும் இங்கே (அ) முதல் (உ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 2.4 முதல் 2.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செலவின விடயமொன்றிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 277,000,000 ஆன மொத்தத் தேறிய நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 07 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டமையினால் நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் அவ்வாறு மாற்றப்பட்ட அளவு நிதி

ஏற்பாட்டில் 20 சதவீதம் முதல் 70 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(iii) 07 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 05 மூலதன செலவின விடயங்கள் என்பவற்றுக்காக மதிப்பீட்டு நிதியேற்பாடு போதியளவில் இல்லாமையினால் நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் ஏனைய செலவின விடயங்களிலிருந்து நிதியேற்பாடு மாற்றப்பட்டிருந்ததுடன் மாற்றப்பட்ட நிதியேற்பாடு ஆரம்ப மதிப்பீட்டு நிதியேற்பாட்டில் 11 சதவீதம் முதல் 300 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(iv) நிதிப்பிரமாணம் 50(1) இன் படி வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிக்கும் போது முன்னரே அனுமானிக்கக்கூடிய சகல சேவைகளும் மதிப்பீட்டில் உள்டக்கப்பட்டமையையும் அவை நிதியாண்டின் போது தனது திணைக்களத்திற்கு நிறைவேற்றக்கூடிய வரையறைக்குள் உள்ளதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும், எரிபொருள் விலை அதிகரிப்பினால் மதிப்பிற்குள்ளான கடற்றொழிலாளர்களுக்கு உதவி வழங்குவதற்காக 290-01-01-7-2502 ஆம் செலவின விடயத்திற்காக ரூபா 300,000,000 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அந்த நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக பயன்படுத்தப்படாத அந்த நிதியேற்பாடுகளிலிருந்து ரூபா 23,000,000 தொகை ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் ரூபா 277,000,000 தொகையான நிதியேற்பாடு சேமிப்பாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு**

---

பல்வேறு செயற்பாடுகளுக்காக ஏனைய அமைச்சுக்கள் மற்றும் நான்கு திணைக்களங்களினால் ரூபா 55,676,097 கூட்டுத்தொகையான நிதியேற்பாடு திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதியேற்பாடுகள் முறையே ரூபா 47,367,254 மற்றும் ரூபா 8,172,185 ஆக ரூபா 55,539,439 கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் படி அமைச்சின் மூலம் வழங்கப்பட்ட நிதியேற்பாடு ரூபா 109,658

தொகையும் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்ட நிதியேற்பாடு ரூபா 27,000 தொகையும் உரிய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) பொது வைப்புக் கணக்கு**

**-----------------------------------------**

2 வருடங்களை விஞ்சிய ரூபா 1,128,990 கூட்டுத்தொகையான 12 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) வருமானக் கணக்கு**

**---------------------------------**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தகுதிச் சான்றிதழ் விநியோகிக்கும் அனுமதிப்பத்திரத்திற்காக மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 5,200,000 ஆக இருந்ததுடன் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 4,202,000 ஆகும். அதன் படி மதிப்பிடப்பட்ட வருமானத்தை விட ரூபா 998,000 தொகை குறைவாக வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ii) 10.03.07.06 ஆம் வருமானக் குறியீட்டின் வருமானக் கணக்கின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 10,838,496 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் அந்த வருமானம் ரூபா 4,504,500 ஆக இருந்தது. அதன்படி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 6,333,996 இனால் அதாவது 140 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. 2012 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2013 ஆம் ஆண்டின் வருமானம் அதிகரிப்பதற்கான காரணம் 2012 மற்றும் 2013 ஒக்தோபர் மாதங்களில் விநியோகிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் அனுமதிப்பத்திரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டமை வருமான விலகளுக்கான காரணமாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 4 வருமான மூலங்களுக்காக ரூபா 1,639,600 தொகையான வருமானம் அதிகரிப்பு தொடர்பில் அந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் தாக்கமொன்று ஏற்பட்டிருக்கவில்லை. அதன் படி வருமான அதிகரிப்பிற்காக

வருமானக் கணக்கில் காண்பிக்கப்பட்ட காரணம் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

**(உ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 29001 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்றின் படி அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,477,327 ஆகும்.

(ii) தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6 ஆம் பிரிவு மற்றும் 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கைகளின் படி உத்தியோகத்தரொருவர் இடம் மாற்றலாகிச் சென்ற தினம் முதல் 03 மாதங்கள் கடந்ததன் பின்னர் திணைக்களத்திற்கிடையே தீர்க்கப்படாத கடன்மீதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட முடியாதிருந்த போதிலும் திணைக்களத்திலிருந்து இடம் மாற்றலாகிச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 268,850 கூட்டுத்தொகையான கடன் மீதியை தீர்ப்பதற்கு 05 மாதங்கள் மற்றும் 06 மாதங்கள் வரையிலான கால தாமதம் ஏற்பட்டிருந்தது.

(iii) தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.1 மற்றும் 4.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஓய்வு பெற்றுச் செல்வதற்கு தீர்மானித்திருந்த உத்தியோகத்தர் ஓய்வு பெற்றுச் செல்வதற்கு முன்னர் கடன் பணத்தை மீள அறவிடுவதற்கு அவகாசமளிக்கும் வகையில் உத்தியோகத்தரின் விருப்பத்தின் படி குறிப்பிட்ட தவணை எண்ணிக்கையினை விட குறைவான தவணை எண்ணிக்கையில் கடன் பணத்தை அறவிடுவதற்கோ அல்லது உத்தியோகத்தரின் மாற்றப்பட்ட ஓய்வூதியத்திலிருந்து அறவிடுவதற்கு அறவிட வேண்டிய சகல கடன் தொடர்பான

விபரங்களும் ஓய்வூதியப் பணிப்பாளருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் படி நடவடிக்கை எடுக்காமையினால் ஓய்வூபெற்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 46,669 கூட்டுத்தொகையான கடன் மீதியை தீர்வு செய்வதற்கு முடியாதிருந்தது.

(iv) தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.4.1 மற்றும் 4.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அரசாங்கத்திற்கு அறவிடவேண்டிய பணம் பிரதான கடன்காரரிடமிருந்து அறவிட முடியாதுள்ள சந்தர்ப்பங்களில் அவர் தொடர்பாக பின்பற்றப்பட வேண்டியதாக தீர்மானிக்கப்பட்ட நடவடிக்கைகளில் பிணையாளர் தொடர்பாகவும் உள்ள நடைமுறைகளின் படி கடன் பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் சேவையை விட்டுச் சென்ற 10 உத்தியோகத்தர்களுக்குரிய ரூபா 396,852 கடன் மீதியை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) பதவி வறிதாக்கப்பட்ட 06 உத்தியோகத்தர்களிடமிருந்து நிலுவையாக இருந்த ரூபா 654,410 தொகையான கடன் மீதியில் எந்தத் தவணைப் பணமும் மீளாய்வாண்டின் போது அறவிடப்படாதிருந்ததுடன், அந்த உத்தியோகத்தர்களுடன் தற்போதைய சேவை நிலைமை தொடர்பாக கண்டறிந்து கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) திணைக்களத்தில் சேவையில் இல்லாத உத்தியோகத்தர்களின் நிலுவைக் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,477,327 இனால் 23 சதவீதம் அதாவது ரூபா 567,997 தொகையான கடன் மீதி 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் தீர்க்கப்படாது கொண்டு வரப்படுகின்றமை கடன்பட்டோர் காலம் பகுப்பாய்வின் படி உறுதிப்படுத்தப்பட்டது.

## 2.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 2.4.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தாபிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக உள்ளகக் கணக்காய்வொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் படி பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2014 மார்ச் 15 ஆந் திகதிக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் தலைமை அலுவலகத்தினதும் மாவட்ட கடற்றொழில் அலுவலகங்களினதும் பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2014 மே 12 இன் பின்னர் பல சந்தர்ப்பங்களில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) நிர்மாணப் பிரிவில் பொருட்பதிவேடு முறைப்படி பேணப்படாதிருந்ததுடன் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பொருள் மெய்மையாய்வு அறிக்கையும் பூரணப்படுத்தப்பட்டிருக்க வில்லை.

(iii) நிதிப் பிரமாணம் 751 இன் படி திணைக்களத்திற்குச் கிடைக்கின்ற சகல பொருட்களும் உடனடியாக பொருட் பதிவேட்டுப்

புத்தகத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் பொருட் பதிவேட்டுப் புத்தகத்தில் உள்ளடக்கப்படாத 698 விடயங்கள் மிகைப் பொருட்களாக பொருள் மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்டிருந்தது.

(iv) மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் படி மிகை மற்றும் பற்றாக்குறை தொடர்பாக நிதிப்பிரமாணம் 757(2) இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்**

வ/ப சீனோர் மன்றத்திற்கு 2010 யூன் 22 ஆந் திகதி முதல் தற்காலிக அடிப்படையில் வழங்கப்பட்ட டபள் கெப் வாகனம் மற்றும் 2013 யூலை 10 ஆந் திகதி முதல் 02 மாத காலத்திற்காக வழங்கப்பட்ட வேன் வாகனம் என்பவற்றை திணைக்களத்திற்கு மீளப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) ஏனைய நிறுவனத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

உணவு மற்றும் விவசாய அமைப்பினால் 2006 ஆம் ஆண்டில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட கெப் வாகனத்தை திணைக்களத்திற்கு கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 இணக்கமின்மைகள்

**(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| (அ) நிதிப்பிரமாணம் 94(1) | 4,160,142 | மீளாய்வாண்டின் போது 13 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஆ) நிதிப்பிரமாணம் 371(அ) | 103,500 | 08 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட எரிபொருள் முற்பணம் 16 தினங்கள் முதல் 33 தினங்கள் வரையான காலம் தாமதித்து முற்பணம் தீர்க்கப்பட்டிருந்தது. |

## 2.7 செயற்திட்ட அமுலாக்கலில் நலிவுகள்

மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) திவிநெகும மீன்பிடியின் பின்னரான அறுவடை தொழில்நுட்ப செயற்திட்டக் கடன் முன்மொழிவுத் திட்டம்

இந்த செயற்திட்டத்தின் மூலம் 2012 ஆம் ஆண்டின் போது 15 மாவட்டங்களில் தொழில்நுட்ப பயிற்சியினைப் பெற்ற நலனாளிகளில் 2675 பேருக்கு ரூபா 10,000 வீதம் கடன் தொகை வழங்குதல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சிலிருந்து ரூபா 26.75 மில்லியன் நிதியேற்பாடு

வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 யூலை மாதம் வரையிலும் மேற்கூறப்பட்ட நிதியேற்பாட்டில் ரூபா 13 மில்லியனுக்கு அண்மித்த பணம் வழங்கப்படாதிருந்ததுடன் நிதி வழங்கப்பட்டு வருடமொன்று கடந்ததன் பின்னரும் கடன் வழங்குதலின் செயல்முன்னேற்றம் 45 வழங்குதலின் சதவீதம் மாத்திரமாக இருந்தது. அவ்வாறே பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கு ரூபா 10 மில்லியன் மீள அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

(ii) கடன் செயற்திட்டம் சுழற்சி நிதியமொன்றாக அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 1842 நலனாளிகளுக்கு ரூபா 18,420,000 கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் அது எதிர்பார்த்த இலக்கில் 71 சதவீதமாக இருந்தது.

(iii) 535 கடன் நலனாளிகள் அதாவது நலனாளிகளில் 30 சதவீதம் அளவில் ரூபா 1,334,935 கூட்டுத்தொகையான கடன் பணத்தை செலுத்துவதை புறக்கணித்து அல்லது தாமதித்து இருந்ததுடன் கடன் தவணைப் பணத்தை அறவிடுதல் தொடர்பாக கடற்றொழில் நீர்வளங்கள் திணைக்களத்தின் பிரதேச மட்டத்தில் உத்தியோகத்தர்களின் பங்குபற்றல் மிகவும் நலிவான மட்டத்தில் காணப்பட்டது.

**(ஆ) மாவட்டக் கூட்டுறவுச் சங்க சுழற்சிக் கடன் நிதிய செயற்திட்டம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திருகோணமலை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் இந்தக் கடன் செயற்திட்டம் சுழற்சி கடன் வழங்கும் செயற்திட்டமாக அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) மாவட்ட கூட்டுறவுச் சங்கத்திற்கு தமது அங்கத்துவ கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒரு தடவையில் விநியோகிக்கப்படக்கூடிய ஆகக்கூடிய கடன் பணம் ரூபா 100,000 ஆக இருந்த போதிலும், 4 மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களினால் 12 அங்கத்தவர் கூட்டுறவுச் சங்கங்களுக்காக ரூபா 150,000 தொகை முதல் ரூபா 1,370,000 வரை கடன் பணம் வழங்கப்பட்டிருந்தது.

(iii) அங்கத்துவ கூட்டுறவுச் சங்கத்தினால் கடன் மீளச் செலுத்தும் ஆகக்கூடிய காலம் ஒரு வருடமாக இருக்க வேண்டிய போதிலும் 8 அங்கத்துவ கூட்டுறவுச் சங்கத்தினால் பெற்ற ரூபா 611,678 கூட்டுத்தொகையான கடன் பணம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் மீளச் செலுத்தப்பட்டிருக்கவில்லை. கடன் பெறப்பட்ட காலம் 1 வருடம் முதல் 3 வருடங்கள் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

(iv) அங்கத்துவ கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தினால் மாவட்ட கூட்டுறவுச் சங்கத்திற்கு கடன் பணம் வழங்குதல் தொடர்பாக மாதாந்த செயல்முன்னேற்ற அறிக்கை சமர்ப்பித்தல் நலிவான நிலையில் காணப்பட்டது.

## 2.8 செயலாற்றல்

---------------------

2013 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினதும் செயல்நடவடிக்கைத் திட்டத்தினதும் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

-----------------------------------------------------------------------------------

திணைக்களத்தின் பிரதான பணிகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அதில் சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி 290-01-01-2401 ஆம் செலவின விடயத்தின் கீழ் கடற்றொழில் பிரிவிற்கு அறிவூட்டும்

நிகழ்ச்சித்திட்டம் திட்டமிடப்பட்டு ரூபா 4.5 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. நிதியேற்பாட்டை சேமிப்பதற்காக அந்த நிகழ்ச்சித்திட்டம் மட்டுப்படுத்தப்பட்டு வாகனம் பழுதுபார்த்தலுக்காக ரூபா 2 மில்லியன் தொகை நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் மாற்றப்பட்டிருந்ததுடன் உரிய செலவின விடயத்தின் கீழ் செலவினம் ரூபா 2.5 மில்லியனாக இருந்தது.

(ii) திணைக்களத்தின் நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல் அறிக்கையின்படி செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 19 நிகழ்ச்சித்திட்டங்களில் எதிர்பார்த்த இலக்கை அடைந்து கொள்ளும் பௌதீக செயலாற்றல் 15 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்ததுடன் 04 நிகழ்ச்சித்திட்டங்களில் எதிர்பார்த்த இலக்கை அடையும் நிதிச்செயலாற்றல் 16 சதவீதம் முதல் 60 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

**(ஆ) திட்டமிடல்**

----------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் 1.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் திணைக்களத்தின் பாதீட்டு நிதியேற்பாட்டிற்கு ஈடாகும். வகையில் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி செயல்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக 6 மூலதன செலவின விடயங்களில் 14 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையான நிதியேற்பாடு நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் மாற்றவேண்டி ஏற்பட்டிருந்தது. அதன்படி செயல்நடவடிக்கைத் திட்டம் நடைமுறையில் அமுல்படுத்துதல் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ii) பின்வரும் சந்தர்ப்பங்களில் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- ❖ தலைமைத்துவத்திற்காக திறமைச் சான்றிதலொன்றை அறிமுகப்படுத்துதல் (Introduced Competency Certificate for Skippers) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 1,000 சான்றிதழ் பத்திரங்களை வழங்குவதற்காக 290-01-01-2502 என்ற செலவின விடயத்தின் கீழ் ரூபா 2.5 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் உரிய செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- ❖ கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளுக்காக ரூபா 8 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது உரிய செயற்பாடுகளை நிறைவேற்றுதல் வெற்றியளிக்காதிருந்ததுடன் ரூபா 2,759,864 செலவில் செயற்பாட்டின் ஒரு பகுதி மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

(iii) கடற்றொழில் உத்தியோகத்தர்களுக்காக இயலளவை உயர்வடையச் செய்தல் - வெளிநாட்டு (Training Capacity Building for Fisheries Officers - foreign) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 38 உத்தியோகத்தர்கள் வெளிநாட்டுப் பயிற்சிக்காக தொடர்புபடுத்தப்பட்டிருந்த போதிலும் உரிய பயிற்சியளித்தல் திட்டமிடப்படவோ அல்லது அந்த நிகழ்ச்சித்திட்டம் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படவோ இல்லை. இதற்காக 290-01-01-1102 ஆம் செலவின விடயத்தின் கீழ் ரூபா 2.8 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 4.266 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

## 2.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

---

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலான வடிவத்தைக் கொண்டிருந்தது. தெரிவுக்

கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) கடல் அட்டைகள் மற்றும் ஊரிகளை ஏற்றுமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்குதல்**

---

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 1996 இன் 02 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் படி கடல் அட்டைகள் மற்றும் ஊரிகளை பிடித்தல், சேகரித்தல், களஞ்சியப்படுத்துதல், கொண்டு செல்லல் மற்றும் ஏற்றுமதி செய்தலுக்காக அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் அதிகாரம் கடற்றொழில் நீர்வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் 2011 ஒக்தோபர் மாதம் முதல் கடல் அட்டைகள் மற்றும் ஊரிகளை பிடித்தல் முதல் ஏற்றுமதி வரையான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் தனியார் நிறுவனத்துடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தது. எவ்வித சட்டரீதியான உரித்தும் இன்றி இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட மேற்கூறப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக பணிப்பாளர் நாயகத்தினால் எவ்வித சட்டரீதியான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்களத்தினால் 01 கிலோகிராமிற்கு ரூபா 10 வீதம் கடல் அட்டைகளை ஏற்றுமதி செய்வதற்காக மாத்திரம் அறவிடப்பட்டு மீன்கள் ஏற்றுமதியாளர்களுக்கு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அனுமதிப்பத்திரம் வீயோகித்திருக்கும் போது கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினால் அதன் ஏற்றுமதி கம்பனியுடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 03 மாத உடன்படிக்கைக் காலத்திற்காக ஒரு கம்பனியிலிருந்து மாதமொன்றிற்கு ரூபா 500,000 தொகை வீதம் அறவிடப்பட்டிருந்தது. அமைச்சின் தீர்மானத்தின் பேரில் ஏற்றுமதி செய்யப்படுகின்ற கடல் அட்டைகள் மற்றும் ஊரிகளில் 01 கிலோ கிராமுக்கு ரூபா 100 வீதம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மிகவும் சலுகைக் கட்டண முறைமையின் அடிப்படையில் மீன் வள முகாமைத்துவத்திற்காக அமைச்சினால்

சட்டங்கள் விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கும் போது இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினால் இவ்வாறு உடன்படிக்கைகளில் கைச்சாத்திடல் மற்றும் மிகைப் பணமொன்று அறவிடுதல் தொடர்பாக திணைக்களத்தினால் எவ்வித விசாரணையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.10 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 56 | 25 | 31 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 16 | 08 | 08 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 608 | 460 | 148 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 107 | 89 | 18 | - |
| (v) | கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்திடமிருந்து உள்ளீர்க்கப்பட்ட * | 42 | 40 | - | - |
| (vi) | ஏனையவை (ஒப்பந்த அடிப்படை) | - | 01 | - | 01 |
| | மொத்தம் | 829 | 623 | 205 | 01 |

* 2012 ஒக்தோபர் 11 ஆந் திகதிய அமப/11/2000/532/031 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் உள்ளீர்க்கப்பட்ட கரையோர பாதுகாப்பு திணைக்களத்திற்குரியதாக இருந்த 04 கரையோர பாதுகாவலர்களுக்கும் 38 பாதுகாப்பு காப்பாளர்கள் அவர்களுக்கு மாத்திரம் வரையறுக்கும் வகையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டின் இறுதிவரையில் 205 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.